FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364181

1 District : கள்ளக்குறிச்சி PS: மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவு Year: 2026 FIR No.: 03/2026 Date: 05.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத-அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7, 8
(ii) Act சட்டம்: 1988 as amended by the Prevention Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: of Corruption (Amendment Act) 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 04.06.2026 Date to : 04.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.30 Hrs Time to : 20.45 Hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 05.06.2026 Time : 14.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) VOL-I Time : 14.00 Hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சுசெய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 40 கி.மீ வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : சார்பதிவாளர் அலுவலகம், மணலூர்பேட்டை
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திருமதி. நவநீதகண்ணி (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : மாவட்ட குற்றப் புலனாய்வு (g) Address : மாவட்ட குற்றப் புலனாய்வு அலுவலர் அலுவலகம்,
தொழில் அலுவலர், விழுப்புரம் முகவரி கடலூர்
மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவு

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. சுந்தரமூர்த்தி, சார்பதிவாளர் 2) திருமதி. பத்மபிரியா, த/பெ ராஜேந்திரன், திருவாரும் மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம், 3) திரு. முத்து @ வெண்டர், த/பெ கோபால் (தனிநபர்) 4) திரு. சீதாராமன் த/பெ தங்கராசு 5) கதிரேசன், த/பெ தாராஜகபாண்டி 6) திரு. பிரபு த/பெ பாலசுப்ரமணியன் (மேலும் அவரது எதிர்தரப்பினர்கள் 7) திரு. முருகவேல், த/பெ சுதீதா நாயுடு 8) ராகவராஜன் த/பெ சந்திரன் 9) திரு. பாரதியார் த/பெ ஏழுமலை, 10) திரு. வெங்கடேசன் த/பெ ராமலிங்கம் (நான்கு நபர்களும் தனிநபர்கள்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைபைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

06.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.06.2026

Name: பெயர் க. கதிரவன்
Rank: நிலை DSP No. எண் .....
VAC, தஞ்சாவூர்.

பணிந்து அனுப்பப்படுகிறது. அம்மையீர், இன்று 05.06.2026-ந் தேதி சுமார் 14.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது திருமதி.கு.கலைச்செல்வி, ஆய்வுக்குழு ஆய்வாளர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 05.06.2026, 16.00 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.03/2026/KLK u/s 7, 8 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர், திருமதி.கு.கலைச்செல்வி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி. ந.க.எண்:ஆகு2/291/2026, நாள்.05.06.2026, ஐயா, பொருள்: திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகம் - 04.06.2026 அன்று கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:பார்வை:திடீர் ஆய்வு மகஜர் நாள்:04.06.2026 விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய திருமதி.கு.கலைச்செல்வி ஆகிய நான் 04.06.2026-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர் மூலமும், புரோக்கர் மூலமும் இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.க.சத்தியராஜ், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம், மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக அரசு வாகனத்தில் புறப்பட்டு சுமார் 15.30 மணியளவில் மணலூர்பேட்டை பஸ்நிலையம் அருகில், வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ள மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே சென்று அங்கிருந்தவர்களிடமும் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் சார்பதிவாளர் பற்றி கேட்டபோது, அவர் புலதணிக்கைகாக வெளியே சென்றியிருப்பதாக தெரிவித்தனர். எனவே அங்கு பணியில் இருந்த உதவியாளர் திருமதி.பத்மாபிரியா, திரு.ஏழுமலை, வீடியோ பதிவாளர், திரு.செந்தில் குமார், உதவியாளர் (தனிநபர்) மற்றும் பிரியா, Data Entry Operator ஆகியோர் மட்டும்தான் அலுவலகத்தில் உள்ளதாக தெரிவித்தனர். பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்யபோவதாக தெரிவித்து, அவ்வலுவகத்தின் பத்திர பதிவு செய்யும் அறையில் 1) கிழக்குபுறத்தில், மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த சார்பதிவாளர் இருக்கை இருந்தது, 2) சார்பாதிவாளர் இருக்கைக்கு தென்புறத்தில் மேற்கு பார்த்து திருமதி.பத்மாபிரியா, உதவியாளர் இருக்கை இருந்தது, அதற்கு எதிர்த்தாற்போல் வடக்கு பார்த்தவாறு 3) திருமதி.பிரியா, Data Entry Operater இருக்கையும் இருந்தது. அவருக்கு நேர்எதிரே சார்பதிவாளர் இருக்கைக்கு மேற்கே திரு.செந்தில்குமார், உதவியாளர் (தனிநபர்) அவரது இருக்கையும் இருந்தது. மேற்படி நபர்களில் திரு.சந்திரசேகர், சார்பதிவளார் மட்டும் அவரது இருக்கையில் இல்லை. மேலும், பத்திர பதிவு அறைக்கு தெற்கு புறத்தில் கண்ணாடி மற்றும் அலுமினிய பீடிங்கால் தடுக்கப்பட்ட புகைபட பதிவு அறை இருந்தது. அந்த அறையின் தென்

கிழக்கில் ஒளிபதிவாளர் திரு.ஏழமலையின் இருக்கையும் இருந்தது. அலுவலகத்தின் பத்திர பதிவு அறையில் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே பத்திரப்பதிவு செய்ய வந்த தனி நபர்கள் மற்றும் ஆவண எழுத்தர்களான 1) திரு.முருகவேல் த/பெ கூத்தநாயுடு 2) திரு.முத்து த/பெ கோபால் 3) திரு.ராமராஜன் த/பெ சந்திரன் 4) திரு.பாரதியார் த/பெ ஏழுமலை 5) திரு.சீத்தாராமன் த/பெ தங்கராஜ் 6) திரு.பிரபு த/பெ பாலசுப்பிரமணியன் 7) திரு.வெங்கடேசன் த/பெ ராமசாமி 8) திரு.கணேஷ் த/பெ சாரங்கபாணி 9) திரு.அறிவழகன் த/பெ கோவிந்தசாமி மற்றும் 10) திருமதி.சங்கீதா க/பெ ரகோத்தமன் ஆகியோர் நின்றிருந்தனர். அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் திரு.ஏழமலை அவர்களிடம் சோதனை செய்ததில் அவரது பர்ஸில் ரூபாய்.50/- பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் தான் தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக கூறினார். மேற்படி தொகை அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவ்வலுவலகத்தில் பணிபுரிந்த தனிநபர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் சோதனை செய்ததில் அவரது பர்ஸில் ரூபாய்.100/- பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் தான் தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக கூறினார். மேற்படி தொகை அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவ்வலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.பத்மா பிரியா, உதவியாளரை பெண் காவலர் உதவியுடனும் சோதனை செய்ததில், அவரிடம் ரூ.50/- இருந்தது. அதை பற்றி கேட்க அவர் தான் காலையில் வரும்போது ரூ.500/- கொண்டு வந்ததாகவும் மதியும் உணவு வாங்குவதற்கு ரூ.450/- செலவு செய்துவிட்டதாவும், மீதம் ரூ.50/- மட்டும் தன்னிடம் உள்ளதாக சொன்னார். மேலும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் அது தொடர்பாக பதிவுகள் இருந்ததால் மேற்படி பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. Data Entry Operater திருமதி.பிரியா அவரிடம் ரூ.20/- மட்டும் இருந்தது, மேற்படி தொகையை பற்றி கேட்க அது அவர் தான் தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக கூறினார். மேற்படி தொகை அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

<u>திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:</u>

1) அலுவலகத்தில் இருந்த, திரு.முத்து கவுண்டர் த/பெ கோபால் என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 21) (200 x 39) ரூ.18,300/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் தான செட்டில்மண்ட் செய்வது தொடர்பாக வந்ததாகவும் மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலக செலவிற்காக கொண்டுவந்ததாக கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்ததாலும், மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

2) பின்னர், அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர் திரு.சீத்தாராமன் த/பெ தங்கராஜ் என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 20) ரூ.10,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் ஆவண எழுத்தர் வேலை பார்ப்பதாகவும் மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில், பத்திரங்களை பதிவு செய்யவும், சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் நபர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

3) பின்னர், அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர் திரு.கணேஷ் த/பெ சாரங்கபாணி என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 2) (200 x 3) (100 x 8) ரூ.2,400/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் ஆவண எழுத்தர் வேலை பார்ப்பதாகவும் மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில், பத்திரங்களை பதிவு செய்யவும், சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் நபர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

4) பின்னர், அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர் திரு.பிரபு த/பெ பாலசுப்பிரமணியன் என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 21) (100 x 5) ரூ.11,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் ஆவண எழுத்தர் வேலை பார்ப்பதாகவும் மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில், பத்திரங்களை பதிவு செய்யவும், சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் நபர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

5) பின்னர், அலுவலகத்தில் இருந்த, திரு.முருகவேல் த/பெ கூத்தாநாயுடு என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 86) (100 x 61) ரூ.49,100/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் பாகபிரிவினை பத்திரம் தொடர்பாக வந்ததாகவும் மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆகும் செலவிற்காக கொண்டுவந்ததாக கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்ததாலும், மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

6) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.ராமராஜன் த/பெ சந்திரன் என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடமிருந்து (500 x 16) (200 x 2) ரூ.8,400/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் பத்திர முறிவு செய்ய வந்ததாகவும் மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆகும் செலவிற்காக கொண்டுவந்ததாக கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்ததாலும், மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

7) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.பாரதியார் த/பெ ஏழுமலை என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 30) ரூ.15,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் கூத்தநாயுடு என்பவருடன் பத்திர பதிவு செய்ய வந்ததாகவும், அதன் செலவிற்கு பணத்தை கொண்டு வந்ததாகவும் கூறினார். பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் அவர் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்ததாலும், மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

8) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.வெங்கடேசன் த/பெ ராமசாமி என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 14) ரூ.7,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தனது தந்தையின் உயில் தருவது தொடர்பாக வந்ததாகவும், மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலக செலவிற்காக கொண்டுவந்ததாக கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்ததாலும், மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

9) பின்னர், அலுவலகத்தில் இருந்த 9) திரு.அறிவழகன் த/பெ கோவிந்தசாமி மற்றும் 10) திருமதி.சங்கீதா க/பெ ரகோத்தமன் ஆகியோர்களை முறையாக ஆண்காவலர் மற்றும் பெண்காவலர் உதவியுடன் சோதனை போது அவர்களிடம் கைபற்ற கூடிய, பணமோ, ஆவணமோ ஏதும் இல்லை, அவர்களை மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலக வருகைக்கான காரணம் விசாரித்தபோது அவர்கள் முறையே பத்திர எழுத்தர் தினகரன் அவர்களிடமும் SRS பத்திர எழுத்தர் அலுவலகத்திலும் வேலை செய்வதாகவும், அலுவல் தொடர்பாக அடிக்கடி மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருவது வழக்கம் என்று சொன்னார்கள்.

அதன் பின்னர், மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தின் தெற்கில் அமைந்துள்ள கணிணி அறை, மேற்கில் அமைந்துள்ள இரு பதிவுவைப்பு அறை, சார்பதிவாளர் இருக்கைக்கு வடக்கு புறத்தில் உள்ள உணவு அருந்தும் அறை மற்றும் சார் பதிவாளர் அலுவலக வெளிப்புற வளாகம் ஆகியவற்றினை சோதனை செய்ததில் கைப்பற்றக்கூடிய பொருளோ, பணமோ ஏதும் இல்லை.

இந்த திடீராய்வின்போது மேற்படி வகையில் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த தொகை ரூ.1,21,200/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தொராயிரத்து இருநூறு மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன்.

பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான G கணக்குப் பதிவேடு, மற்றும் H கணக்குப் பதிவேடு, ஆகியவற்றை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் அலுவலகத்தின் வருகை பதிவேடு மற்றும் இயக்க பதிவேடு ஆகியவையை பார்வையிட்டதில் காலையில் சார்பதிவாளர் வந்ததற்கான பதிவுகள் உள்ளது. ஆனால் அவர் புல தணிக்கைக்கு சென்றதற்கான பதிவுகள் இயக்கபதிவேட்டில் இல்லை. மேலும் வருகை பதிவேட்டில் 6-வது பக்கத்தில் ஜீன் 2026 மாதத்திற்கான வருகை பதிவுகளை பார்த்தபோது திரு.ச.அருண்ராஜ், உதவியாளர் மற்றும் திரு.சு.விக்னேஷ், இளநிலை உதவியாளர் ஆகியோர்கள் கையொப்பம் செய்ய வேண்டிய இடத்தில் எவ்வித பதிவுகளும் ஜீன் 2026 முதல் தேதியிலிருந்து தற்போது வரை இல்லை. மேலும் அலுவலகத்திற்கு பொதுமக்களுக்கு பணம் கொண்டு வரக்கூடாது என்பதற்கான எவ்வித விழிப்புணர்வு பலகையும் இல்லை. மேலும் அலுவலகத்தின் உள்ளே மற்றும் வெளியே இலஞ்சம் புகார் தொடர்பாக தெரிவிக்க வேண்டிய முகரியோ, வாசகமோ ஏதும் இல்லை, பின்னர் விசாரணைக்காக 1) வருகைப்பதிவேடு, 2) தனி நபர் பண இருப்பு பதிவேடு, 3) H கணக்குப் பதிவேடு மற்றும் 4) இயக்க பதிவேடு ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் G கணக்கு பதிவேடு பார்வையிட்டு திரும்ப அலுவலக வசமே ஒப்படைக்கப்பட்டது.

பிறகு அலுவலகத்தில் இருந்த சார்பதிவாளர் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், கொடிநாள் வசூலை பற்றி கேட்டபோது அவை அனைத்தும் இணைவழியில் மட்டுமே வசூல் செய்யப்படுவதாக தெரிவித்தார். இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 04.06.2026-ம் தேதி சுமார் 15.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 04.06.2026-ம் தேதி இரவு சுமார் 20.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது மணலூர்பேட்டை சார்பதிவாளர் மற்றும் அவ்வலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இலஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் மொத்தம் ரூ.1,21,200/- கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக நான் கொடுத்த புகாரின் பேரில் சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1) திரு.சு.சந்திரசேகர், சார்பதிவாளர், மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் 2) திருமதி.பத்மபிரியா, த/பெ ஆனந்தஜோதி, உதவியாளர், மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம், 3) திரு.முத்து கவுண்டர் த/பெ கோபால், தனிநபர் 4) திரு.சீத்தாராமன் த/பெ தங்கராஜ், ஆவண எழுத்தர் 5) திரு.கணேஷ் த/பெ சாரங்கபாணி, ஆவண எழுத்தர் 6) திரு.பிரபு த/பெ பாலசுப்பிரமணியன், ஆவண எழுத்தர் 7) திரு.முருகவேல் த/பெ கூத்தாநாயுடு, தனிநபர் 8) திரு.ராமராஜன் த/பெ சந்திரன், தனிநபர் 9) திரு.பாரதியார் த/பெ ஏழுமலை, தனிநபர் 10) திரு.வெங்கடேசன் த/பெ ராமசாமி, தனிநபர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Madam,

Received the above computer typed complaint on 05.06.2026 at about 14.00 hrs. After getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Kallakurichi Vigilance and Anti-Corruption Cr.No.03/2026/KLK u/s 7, 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 16.00 hrs today on 05.06.2026 sd xxxxxx on 05.06.2026 (K.Sathiyaraj) (Deputy Superintendent of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Principal District and Sessions Judge, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

05.06.2026

(K.Sathiyaraj)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.